
# திராவிடத்தால் வாழ்கிறோம்

975

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

140

# கோயம்பேடு பசுமைப் பூங்கா!

## மக்கள் நல அரசின் மகத்தான சேவைகள்!



`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

சென்னை நகரத்தின் மிக முக்கியமான அடையாளங்களில் ஒன்று கோயம்பேடு. புறநகர் பேருந்து நிலையம், தனியார் ஆம்னி பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதி என்பதால், எப்போதும் பரபரப்பாக இருக்கும். கோயம்பேட்டின் மற்றொரு முக்கிய அடையாளமாக இருப்பது கோயம்பேடு - பூந்தமல்லி சாலை மேம்பாலம். முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, அமைத்த மேம்பாலங்களில் ஒன்று.

அந்த ரவுண்டானாவின் நான்கு புறங்களிலும் கீழ்ப் பகுதிகளில் 3.59 ஏக்கர் நிலப்பகுதி, எந்தப் பயன்பாடும் இல்லாமல் இருந்த நிலையில், அந்த இடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப மிகச் சிறப்பான, பசுமைப் பூங்காவாக மாற்றியிருக்கிறது, திராவிட மாடல் அரசு.

சென்னை பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில், எதிர்கால தேவைகளைக் கருதியும், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பவும் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, 2023-24 நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, சென்னை நகரின் சீரான மற்றும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, அடுத்த மூன்று ஆண்டுகளில் ரூ.1,000 கோடி செலவில் ‘வடசென்னை வளர்ச்சித் திட்டம்' உள்பட பல திட்டங்களைச் செயல்படுத்த உத்தரவிட்டார், நம் முதலமைச்சர்.

அதன்படி, சென்னையின் உள்கட்டமைப்பு பற்றாக்குறை மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து திட்டங்கள் தீட்டப்பட்டன. வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகள் தவிர, சென்னை கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கம், சென்னை சென்ட்ரல் ஸ்கொயர், போரூர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஈர நில பூங்கா என மக்களின் தேவை சார்ந்த பல பொழுதுபோக்குக் கட்டமைப்புகளையும் அரசு உருவாக்கி வருகிறது. அந்த வரிசையில், சென்னை கோயம்பேடு சந்திப்பில் 10.27 கோடி ரூபாய் செலவில் பசுமைப் பூங்காவை அமைத்துள்ளது அரசு.

### கோயம்பேடு பசுமைப் பூங்கா

3.5 ஏக்கர் பரப்பளவில், திறந்தவெளி அரங்கம், நிழற்கூடங்கள், எட்டு வடிவ நடைபாதை, சிறார் விளையாட்டுப் பகுதி, உடற்பயிற்சிப் பகுதி, யோகா தளம், சறுக்கு



வளையம், நீரூற்று, நடைபாதை இருக்கை வசதிகள். பசுமைப் புல்வெளிகள் என அழகுற அமைக்கப்பட்ட பசுமைப் பூங்காவை 26.09.2025 அன்று திறந்துவைத்தார் முதலமைச்சர்.



இந்தப் பூங்கா தவிர, சென்னை செனாய் நகரில் பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடல், பம்மல் ஈஸ்வரி நகரில் விளையாட்டுத் திடல், வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்துதல் பணி, விஜய நகர் பேருந்து நிறுத்தம், முடிச்சூர் இரங்கா நகரில் மேம்படுத்தப்பட்ட குளம், தங்க சாலையில் முதல்வர் படைப்பகம் என 7 முடிவுற்ற பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

### பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடல்

சென்னை, செனாய் நகரில் 10.56 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் பார்வையாளர்கள் மாடத்துடன் கூடிய கால்பந்து மைதானம், இரண்டு கால்பந்துப் பயிற்சி மைதானம், கூடைப்பந்து மைதானம், கைப்பந்து ஆடுகளம், நடைபாதை, இருக்கை வசதிகள், உடற்பயிற்சிக் கூடம், நிர்வாக அலுவலகம், வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

> இந்தியாவின் மிக முக்கியமான, மிகப் பெரிய மாநகரான சென்னையின் தனித்த அடையாளங்களாக இவை உருவாகி வருகின்றன.

### ராமாபுரம் பூங்கா

சென்னை, ராமாபுரத்தில் 7.32 கோடி ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள திறந்தவெளிப் பூங்காவில், பசுமை நிறைந்த புல்வெளிப் பகுதிகள், சறுக்கு வளையம், திறந்தவெளி அரங்கம், யோகா தளம், தியானப் பகுதி, சிறார் விளையாட்டுப் பகுதி, எட்டு வடிவ நடைபாதை, நிழற் கூடங்கள், பசுமை நிறைந்த புல்வெளி போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

> அனைத்து பூங்காக்களிலும் சுற்றுப்புறத் தூய்மையைக் காக்கும் வகையில், மரங்கள் மற்றும் செடிகள், நடைபாதை மற்றும் இருக்கைகள் சிறுவர்கள் விளையாட்டுத் திடல், யோகா மற்றும் தியானக் கூடம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

### பம்மல் விளையாட்டுத் திடல்

செங்கல்பட்டு மாவட்டம், பம்மல், ஈஸ்வரி நகரில் 4.91 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலில், பார்வையாளர்கள் மாடத்துடன்கூடிய கால்பந்து மைதானம், உட்புற விளையாட்டு அரங்கம், பூப்பந்து மைதானம், யோகா தளம், சிறார் விளையாட்டுப் பகுதி, உடற்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கூடம், நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### வேளச்சேரி பாலம் பூங்கா

சென்னை, வேளச்சேரியில் 4.45 கோடி ரூபாய் செலவில் மேம்பாலத்தின்கீழ் அழகுபடுத்தும் பணிகளும், விஜய நகரப் பேருந்து நிறுத்தமும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு நீரூற்று, இறகுப் பந்து மைதானம், கண்கவர் சிலைகள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், நடைபாதைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் நல அரசின் மகத்தான திட்டங்கள் பலவும் இந்தியாவுக்கே முன்மாதிரியாக உள்ள நிலையில், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் கவனம் கொடுத்து, பலமான கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது திராவிட மாடல் அரசு. இந்தியாவின் மிக முக்கியமான, மிகப் பெரிய மாநகரான சென்னையின் தனித்த அடையாளங்களாக இவை உருவாகி வருகின்றன. பொழுதுபோக்கு சூழலியல் சார்ந்தும், சென்னை நகரில் புதிய வரலாற்றினை எழுதிக்கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு.

...சாதனை தொடரும்

---

## சுயமரியாதை இயக்க நூற்றாண்டு கொண்டாட்டம்!




கல்வி, பெண்கள் உரிமை, சாதிப் பட்டத்தை விட்டொழிக்கும் தீர்மானம் என தமிழ்நாட்டின் அடுத்த நூற்றாண்டிற்கான பாதை வகுக்கப்பட்ட மாநாடு, 1929-இல் நடைபெற்ற செங்கல்பட்டு மாகாண சுயமரியாதை மாநாடு. அத்தகைய பெருமைக்குரிய மாநாடு நடைபெற்ற செங்கல்பட்டில், சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, மாநில மாநாட்டை எதிர்வரும் அக்டோபர் 4-ஆம் தேதி நடத்துகிறது திராவிடர் கழகம்.

மறைமலை நகரில் முழு நாள் நிகழ்வாக நடைபெறும் இம்மாநாட்டை, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா திறந்து வைக்கிறார். மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா வாழ்த்துரை வழங்குகிறார். பெரியார் பிறந்த நாள் மலரை சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியனும், உலகத் தலைவர் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு (தொகுதி-12) நூலை வி.சி.க. தலைவர் திருமாவளவனும் வெளியிடுகின்றனர்.

பிற்பகலில் நடைபெறும் கருத்தரங்கில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி நிறைவுரையாற்றுகிறார்.

மாலையில் திராவிடர் இன எழுச்சிப் பேரணி நடைபெற உள்ளது. இறுதியாக, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தலைமையில், நடைபெறும் நிறைவு விழா மாநாட்டில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு கல்வெட்டைத் திறந்துவைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஆற்றவுள்ளார். படத்திறப்பு, கலைநிகழ்ச்சிகள், உரைவீச்சுகள் என காலை 8 மணிமுதல் இரவு 9 மணிவரை, கருத்தாழமிக்க நிகழ்ச்சிகளுடன் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநாட்டை நடத்துகிறது திராவிடர் கழகம். உணர்வோடு அணிதிரள்வோம்!

---

## ஃப்ளாஷ்பேக்



### 1960 காலகட்ட கழக முன்னோடிகள்!



சி.பூங்கோதை

எனது தந்தையார் எம்.சின்னப்பன், ஈரோட்டின் கழக முன்னோடி பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் என கழகத் தலைவர்கள் பலருடனும் நெருங்கிப் பழகியவர். ஈரோட்டில் தந்தை பெரியார் பட்டறையில் அனைவருடனும் இணைந்து செயல்பட்டவர். அன்றைய ஈரோடு நகர்மன்ற 22-வது வார்டு உறுப்பினராக 1952-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை செயல்பட்டவர். இந்தப் படம் 1960 காலகட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், கழக நிகழ்ச்சிக்காக, ஈரோடு வருகைதந்தபோது எடுக்கப்பட்டது. உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

– சி.பூங்கோதை, கள்ளுக்கடைமேடு, ஈரோடு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## ம.ல.ரு.க

### விழா மேடையிலேயே முதல் கையெழுத்து!

2006-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராகப் பதவியேற்ற அதே விழா மேடையிலேயே, தமிழ்நாட்டில் 2 கோடி குடும்ப அட்டைகளுக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்திற்கு முதல் கையெழுத் திட்டார். பின்னர், கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்பதை ஒரு ரூபாயாகக் குறைத்தும் ஆணையிட்டார். பகுதி நேர நடமாடும் கடைகள் உள்பட 33,236 நியாயவிலைக் கடைகள்மூலம் பொது விநியோகம் சீரானது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131